இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

விழுவது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 23.10.2026

முதலமைச்சர் விளக்கம் அளிக்க வேண்டும்!

பல நூறு கோடி ரூபாய் மதிப்பிலான - 135 கிலோ மெத்தபெட்டமைன் போதைப் பொருள் வைத்திருந்த த.வெ.க. நிர்வாகி பூபாலனை மத்திய வருவாய் புலனாய்வு காவல் துறை கைது செய்துள்ளது. இது குறித்து விளக்கம் அளிக்க வேண்டியது முதலமைச்சர் விஜய்யின் கடமை ஆகும்.

கைது செய்யப்பட்டு இருப்பவர் த.வெ.க.வைச் சேர்ந்த நிர்வாகி. எனவே கட்சித் தலைவர் என்ற முறையில் விளக்கம் அளிக்க வேண்டும்.

மாநிலத்தில் காவல் துறையைக் கையில் வைத்திருப்பவர் விஜய். உள்துறை அவர் கையில்தான் இருக்கிறது. அவரது காவல் துறையால் இதுவரை பூபாலனைக் கைது செய்யாதது ஏன்? இதற்கும் விஜய் பொறுப்பேற்க வேண்டும்.

ஆட்சிக்கு வந்ததும் போதைப் பொருள் தடுப்புக்காக அதைச் செய்து விட்டேன், இதைச் செய்து விட்டேன் என்று பீற்றிக் கொண்டு இருந்தாரே விஜய்? அவரது போதைத் தடுப்புக் காவல் துறை என்ன செய்து கொண்டு இருக்கிறது? பூபாலன் த.வெ.க. நிர்வாகி என்பதற்காக அவரைக் காப்பாற்றிக் கொண்டு இருந்ததா? இதற்கு முதலமைச்சர் பதில் சொல்ல வேண்டாமா?

பூபாலனை த.வெ.க.வில் சேர்த்து அவருக்கு கட்சியின் செயற்குழு உறுப்பினர் பதவியை வாங்கித் தந்தவர் த.வெ.க.வின் நாகை மாவட்டச் செயலாளர் சுகுமாறன்தான் என்று ஊடகங்கள் எழுதி வருகின்றன. அந்த சுகுமாறன் மீது இதுவரை நடவடிக்கை எடுக்காதது ஏன்? தூயசக்தி விஜய் ஏன் மௌனமாக இருக்கிறார்?

25.10.2026 தேதியிட்ட 'ஜூனியர் விகடன்' இதழில், "கடந்த சட்டமன்றத் தேர்தலில் கீழ்வேளூர் தொகுதியில் போட்டியிட சீட் கேட்டார் பூபாலன். தேர்தலுக்குப் பயன் படுத்துவதற்காகவே புதிதாக உயர்ரக கார் ஒன்றையும் வாங்கினார். ஆனால் அவருக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. அதனால் நாகை தொகுதியில் போட்டியிட்ட சுகுமாறனுக்குத் தேர்தல் வேலை பார்த்தவர். குறிப்பிட்ட அளவு செலவுகளையும் கவனித்துக் கொண்டார்" என்று த.வெ.க. மாவட்ட நிர்வாகிகள் சொன்னதாக எழுதி இருக்கிறது. தூயசக்தி கட்சியின் தேர்தல் வேலைகளுக்கு என்ன மாதிரியான பணம் நடமாடி இருக்கிறது என்று தெரிகிறது அல்லவா? இதற்கு விஜய் விளக்கம் அளிக்க வேண்டாமா?

ஆளும் கட்சியின் த.வெ.க. நிர்வாகியாக இருப்பதால் காவல் துறை அதிகாரிகள் பூபாலனுக்கு உதவியாக இருந்திருப்பதும் அம்பலம் ஆகி இருக்கிறது. வேளாங்கண்ணி டி.எஸ்.பி.யின் கார் ஓட்டுநர் சிவா, வேளாங்கண்ணி காவல் நிலைய பெண் காவலர் சங்கீதா ஆகிய இருவரும் இதில் தொடர்புடையவர்கள் என்று ஊடகங்கள் செய்தி போட்ட பிறகு அவர்கள் இருவரையும் பணியிட மாற்றம் செய்துள்ளது விஜய்யின் உள்துறை. பணியிட மாற்றம் செய்தால் போதுமா? அதுதான் அவர்களுக்கான தண்டனையா? பணியிட மாற்றம் செய்து, தண்டனை வழங்கிவிட்டதாகக் காட்டி காப்பாற்றி இருக்கிறார் முதலமைச்சர் விஜய்.

இலங்கையைச் சேர்ந்தவர் கனடாவில் இருந்து வந்து நாகையில் தங்கி, இங்கிருந்து த.வெ.க. நிர்வாகியிடம் போதைப் பொருளை வாங்கி நாகை வழியாக இலங்கைக்கு கடத்தப் பார்த்துள்ளார். தமிழ்நாட்டின் பாதுகாப்பு எந்தளவுக்கு கேள்விக் குறி ஆகி இருக்கிறது பார்த்தீர்களா?

இராமநாதபுரத்தில் சில மாதங்களுக்கு முன் பிடிபட்ட போதைப் பொருள், இவரால் விற்கப்பட்டது என்றும் சொல்லப்படுகிறது. அப்படியானால் போதை எந்தளவு பரவி இருக்கிறது பார்த்தீர்களா?

போதைக் கும்பலுக்கு இத்தகைய துணிச்சலைக் கொடுத்தது யார்? த.வெ.க. ஆட்சி தானே?

பூபாலனுடன் சேர்ந்து போதைப் பொருள் கடத்தலில் தொடர்புடைய சுகன் என்பவரும் கைது செய்யப்பட்டுள்ளார். அந்த சுகனின் உறவினர்தான் இடமாற்றம் செய்யப்பட்டுள்ள கார் ஓட்டுநர் சிவா. அப்படியானால் இந்த போதைப் பொருள் கடத்தலே இவர்களுடைய பாதுகாப்புடன்தான் நடந்துள்ளது என்றுதானே சொல்ல முடியும்? காவல் துறையைக் கையில் வைத்திருக்கும் முதலமைச்சர் இதற்கு பதில் அளிக்க வேண்டாமா?

பூபாலன் நடத்தி வந்த லாட்ஜ் முழுக்க முழுக்க கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது விஜய்யின் போதை தடுப்பு போலீசுக்குத் தெரியாதா? மத்திய வருவாய் புலனாய்வு போலீஸாருக்குத் தெரிந்தது. விஜய் போலீசுக்குத் தெரியாமல் போனதா? அல்லது தெரிந்தும் மறைக்கப்பட்டதா? த.வெ.க. நிர்வாகி என்பதற்காக விட்டுவிட்டார்களா?

முதலமைச்சர் விஜய்யுடன் போதைப் பொருள் கடத்தல் மாஃபியா பூபாலன் இருக்கும் படங்கள் வெளியாகி வருகிறதே. இதற்கு விஜய் விளக்கம் அளிக்க வேண்டாமா? அவரைக் கட்சியை விட்டு நீக்கியதால் எல்லாம் சரியாகப் போய்விடுமா?

விஜய் ஆட்சிக்கு வந்த மே மாதம் முதல் இதுவரை எவ்வளவு போதைப் பொருட்கள் இவர்களால் தமிழ்நாட்டுக்குள் வந்ததோ? எவ்வளவு போதைப் பொருள் வெளிநாட்டுக்கு கடத்தப்பட்டதோ? த.வெ.க. அரசால் விளக்கம் அளிக்க முடியுமா? 'எதுவுமே நடக்கவில்லை' என்று சொல்ல முடியுமா?

நாகை மாவட்டம் யார் கட்டுப்பாட்டில் இருக்கிறது? நாகை துறைமுகப் பாதுகாப்பு யார் கட்டுப்பாட்டில் இருக்கிறது? இரண்டுமே த.வெ.க. அரசின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது என்பது உண்மையானால் 135 கிலோ மெத்தபெட்டமைனுக்கு பொறுப்பேற்று பதில் அளிக்க வேண்டியது முதலமைச்சர் விஜய் தானே?

போதை மருந்தை வெளிப்படையாகப் பயன்படுத்தி, அதனை வீடியோவும் எடுத்து வைத்திருந்த 'கில்லி' சரத்குமார் என்பவர் அமைச்சராக இருக்கும் போது நாம் போதை மருந்து கடத்தினால் என்ன தவறு என்று த.வெ.க. நிர்வாகிகள் நினைக்கிறார்களா?

'சிங்கப் பெண்' அதிரடிப்படை ஆரம்பித்தார் விஜய். அது முதல் பாலியல் வன்கொடுமைகள் அதிகம் ஆனது. போதைப் பொருள் தடுப்பு அதிரடிப்படை தொடங்கினார். அது முதல் போதை மருந்து நடமாட்டம் அதிகம் ஆகி உள்ளது. எல்லாமே விளம்பர மாயை. விளம்பர மாஃபியாவாக மட்டுமே இருக்கிறது.





தூத்துக்குடி பக்கிள் ஓடை, டைமண்ட் காலனி பகுதியில் நடைபெற்று வரும் பாலம் கட்டுமானப் பணிகளை கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. ஆய்வு செய்தார். தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.

த.வெ.க.விற்கு எதிராகச் செயல்படும்

பெண்களைத் தரக்குறைவாக விமர்சிப்பதா?

கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

தூத்துக்குடி, அக். 23 -

"த.வெ.க.வை எதிர்த்து செயல்படும் பெண்களைத் தரக்குறைவாக விமர்சிப்பதா?" என்று கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி விமான நிலை யத்தில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி ராஜாத்தி கருணாநிதி செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

ஆட்சிப் பொறுப்பில் இருக்கக்கூடிய த.வெ.க. அரசு பருவமழையை எதிர்கொள்ள எந்தவித முன்னேற்பாடுகளையும் செய்ததாகத் தெரியவில்லை. சென்னையின் பல இடங்களில் சிறிதளவு மழை பெய்ததற்கே தண்ணீர் தேங்குவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். இவ்வாறான சூழலில் தூத்துக்குடியில் மழை பெய்தால் அதிகளவு தண்ணீர் தேங்கும்.

ஏனெனில், கடல் மட்டத்தைவிடக் கீழே இருக்கக்கூடிய நகரமாகத் தூத்துக்குடி இருப்பதால், தண்ணீர் தேங்கக்கூடிய வாய்ப்பு அதிகமாக உள்ளது. எனவே, இங்கு கூடுதலாகக் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. அதனால், தண்ணீர் தேங்காமல் இருப்பதற்கான நடவடிக்கைகளைப் பார்வையிட தூத்துக்குடி மேயர் ஜெகன் அவர்களோடு சென்று பருவமழை முன்னேற்பாடு பணிகளைப் பார்வையிட்டோம்.

தற்போது பருவமழையை எதிர்கொள்ள எங்களால் முடிந்த வரை பணிகளைச் செய்கிறோம். இதைத் தாண்டி தேவையுள்ள நேரத்தில் அரசு ஒத்துழைப்பு கொடுக்க வில்லை என்றால், நிச்சயமாக அதற்கு எதிர்வினையாற்றுவோம்.

த.வெ.க.வினரின் தரக்குறைவானப் பதிவுகள்!

முன்னதாக, பெண்களைத் தரக்குறைவாகப் பேசுவதாகக் கூறி தொடர்ந்து கைது நடவடிக்கைகளை மேற்கொள்ளும் த.வெ.க. அரசு, தங்கள் கட்சியினரை எதிர்த்துப் பேசும் பெண்கள் மீது த.வெ.க.வினர் சமூக வலைதளங்களில் நடத்தும் அவதூறுத் தாக்குதல்களைக் கண்டுகொள்வதில்லை. மேயர் பிரியா உள்ளிட்ட தி.மு.க.வைச் சேர்ந்த பெண்கள், த.வெ.க.வினரின் செயல்பாடுகளை விமர்சிக்கும் பெண்கள், சமூக வலைதளங்களில் இயங்கும் பெண்கள் எனப் பலரையும் குறிவைத்து, த.வெ.க.வினர் மீண்டும் மீண்டும் தரக்குறைவான பதிவுகளைப் பதிவிட்டு வருகின்றனர். இவ்வாறு பெண்களை அவமதிக்கும் இத்தகைய செயல்களுக்கு எதிராகவும் அரசு பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நேற்று தாராபுரத்தில் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கார்த்திகாவைக் கைது செய்திருக்கிறார்கள். தங்களுக்கு எதிராகப் பதிவிடும், எதிர்த்துச் செயல்படும் பெண்களைக் குறிவைத்து, அக்கட்சியினர் சமூக வலைதளங்களில் தொடர்ந்து மிகத் தரக்குறைவான பதிவுகளைப் பதிவிட்டு வருகின்றனர். பெண்களை மதிப்பதாகவும், பாதுகாப்பதாகவும் கூறிக்கொள்ளும் இவர்களின் லட்சணம் இதுதானா?

இவ்வாறு கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. பேட்டியளித்தார்.

திருப்பத்தூரில் நாளை

மருதுபாண்டியர்கள் 225-ஆவது குருபூஜை!

மாவட்டக் கழகத் தோழர்களுக்கு முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வேண்டுகோள்!

சிவகங்கை. அக். 23 -

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் நாளை மாமன்னர் மருது பாண்டியர்கள் 225வது ஆண்டு குருபூஜை நடைபெறுகிறது. சிவகங்கையை தலைநகராக கொண்டு ஆட்சி புரிந்தவர்கள் மாமன்னர் மருது பாண்டியர்கள். பெரிய மருது சின்ன மருது என்று அழைக்கப்பட்ட இவர்கள் மருது சகோதரர்கள். இவர்கள் நாட்டின் சுதந்திர போராட்டத்திற்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து. பல்வேறு போராட்டங்களை நடத்தியவர்கள்.

ஆங்கிலேயர்கள் மருது சகோதரர்களை சிறைபிடிக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டும் அவர்களை சிறைபிடிக்க முடியவில்லை. மாமன்னர் மருது பாண்டியர்கள் ஆங்கிலேயர்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கினார்கள். பல்வேறு திட்டங்களை தீட்டியும் ஆங்கிலேயர்கள் மாமன்னர் மருது பாண்டியர் களை உயிருடன் பிடிக்க முடியவில்லை. இறுதியில் ஆங்கிலேயர்கள் மாமன்னர் மருது பாண்டியர்களை உயிருடன் பிடிக்க திட்டமிட்டு மருது பாண்டியர்கள் சரண் அடையாவிட்டால் அவர்களால் காளையார் கோவில் ராஜகோபுரத்தை பீரங்கி வைத்து தகர்க்கப்படும் என்று அறிவித்தார்கள்.


இதைக் கேள்விப்பட்ட மாமன்னர் மருது சகோதரர்கள் திருப்பத்தூரில் ஆங்கிலேயர்களிடம் சரண் அடைந்தார்கள். அவ்வாறு சரண் அடைந்த மருதிருவரிடம் ஆங்கிலேயர்கள் அவர்களின் இறுதி விருப்பம் என்ன என்று கேட்ட பொழுது தங்களால் தானமாக அளிக்கப்பட்ட நிலம், இடங்கள் காளையார் கோவில் சொர்ணகாளீஸ்வரர் ஆலயம், ராஜகோபுரம் ஆகியவற்றை இடிக்கக் கூடாது என்று. கூறினார்கள். மேலும் காளையார் கோவில் காளீஸ்வர ஆலயம் முன்பாக தங்களது தலையை அடக்கம் செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.



அவர்களின் கோரிக்கையை ஆங்கிலேயர்கள் ஏற்று மாமன்னர் மருது பாண்டியர்கள் இருவரையும் தூக்கில் போடுமாறு உத்தரவிட்டார்கள். இதில் மருது சகோதரர்களின் உடல் திருப்பத்தூரிலும், தலை காளையார் கோவிலிலும் 224 ஆண்டுகளுக்கு முன் அடக்கம் செய்யப்பட்டது. அதனை ஒட்டி ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் 24ஆம் தேதி மாமன்னர் மருது பாண்டியர்கள் தூக்கிலிடப்பட்ட நாள் குருபூஜை தினமாக நடைபெற்று வருகின்றது. இந்த ஆண்டு நாளை 24ம்தேதி 225வது ஆண்டு குரு பூஜையினை முன்னிட்டு சிவகங்கை மாவட்ட தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமையில் தி.மு.க.வினர் காலை 10 மணியளவில் மலர் அஞ்சலி செலுத்துகிறார்கள். மாமன்னர் மருதுபாண்டியர்கள் நினைவிடத்திலும், மருதுசகோதரர்கள் தூக்கிலிடப்பட்ட பேருந்து நிலையம் அருகில் கழக நிர்வாகிகள் மலர் அஞ்சலி செலுத்துகிறார்கள். அதனைத் தொடர்ந்து அன்னதானம் நடைபெறுகிறது. முன்னதாக திருப்பத்தூர் அண்ணா சிலையிலிருந்து முன்னாள் அமைச்சர் மாவட்ட கழகச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் ஊர்வலமாக சென்று நினைவஞ்சலி செலுத்துகிறார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள், செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொள்ளுமாறு முன்னாள் அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.பெரிய கருப்பன் அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்யா; தொகுதி மேம்பாட்டு நிதியைக் கூட முறையா செலவு செய்யத் தெரியாமல் பக்கத்து தொகுதிக்கு ஒதுக்கிய ஒரு அமைச்சர் பத்தி கேள்விப்பட்டியா?

போண்டி : **ஆமாய்யா; 'த.வெ.க. தமாஷ்லே' இதுவும் ஒன்னு, அமைச்சர் ஜெகதீஸ்வரி பத்தி அடிக்கடி செய்தி இது மாதிரி வரத்தான் செய்யுது. முறையா இல்லாமல், அடித்த காத்துல உச்சாணிக் கொம்புக்கு போனா இப்படித்தான் நடக்கும். இன்னும் என்னவெல்லாம் இது மாதிரி நடக்கப்போகுதோ!**